**வணக்கம்**

**ஆகாஷ்வாணி-புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர்: மலர்விழி**

**தேதி: 02.10.2025** **நேரம்: மாலை 6.10 மணி**

---

தலைப்புச் செய்திகள்

தேசப்பிதா மகாத்மா காந்தியின் 156 ஆவது பிறந்த நாளான இன்று நாட்டின் பல்வேறு பகுதிகளில் அஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

காமராஜரின் வாழ்க்கை, எளிமை, நேர்மை, ஆகியவை ஏழைகளின் மேம்பாட்டிற்கு விலை மதிப்பற்ற பங்களிப்பை அளித்துள்ளதாக குடியரசு துணைத் தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

ஆபரேஷன் சிந்தூர், இந்திய ஆயுதப்படைகளின் தொழில்நுட்ப வலிமையை உலகிற்கு வெளிப்படுத்தி உள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

பிரதமர் திரு நரேந்திர மோடியால் தொடங்கி வைக்கப்பட்ட தூய்மை இந்தியா திட்டம், நாட்டில் சமுதாய புரட்சியை ஏற்படுத்தி உள்ளதாக புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் தெரிவித்துள்ளார்.

தேசப்பிதா மகாத்மா காந்தியின் 156 ஆவது பிறந்த நாளான இன்று நாடு முழுவதும் அஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சி நடைபெற்றது. புதுடெல்லி ராஜ்காட்டில் உள்ள மகாத்மா காந்தியின் நினைவிடத்தில் சர்வ மத பிராத்தனை நடைபெற்றது. குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, குடியரசு துணைத் தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன், பிரதமர் திரு நரேந்திர மோடி, மக்களவை சபாநாயகர் திரு ஓம் பிர்லா, மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங், மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா உள்ளிட்ட தலைவர்கள் மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

சமூக தீமைகளை குறைப்பதற்காக தமது வாழ்க்கையை அர்ப்பணித்தவர் மகாத்மா காந்தி என்றும், அகிம்சையை தம் வாழ்க்கை முறையாக இறுதிவரை கடைபிடித்து வாழ்ந்தவர் என்றும் குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு தமது செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

மனித வரலாற்றின் போக்கை மாற்றியமைத்த காந்தியின் அசாதாரண வாழ்க்கையின் சிந்தாந்தத்தை பாராட்டிய பிரதமர், அவரது தைரியமும், எளிமையும் பெரிய மாற்றத்திற்கான கருவிகளாக அமைந்ததாக தமது சமூக

*காந்தி ஜெயந்தி 2 (12)*

ஊடகப்பதிவில் தெரிவித்துள்ளார். விக்சித் பாரதத்தை உருவாக்க அவரது பாதையில் தேசம் தொடர்ந்து செல்லும் என்றும் பிரதமர் கூறினார்.

மகாத்மா காந்தி உண்மை, அகிம்சை மற்றும் நல்லிணக்க கொள்கைகள் மூலம் தேசத்தை ஒன்றிணைத்து, சகோதரத்துவம் மற்றும் உண்மையின் பாதையை தொடர்ந்து ஊக்குவித்ததாக எதிர்கட்சி தலைவர் திரு ராகுல்காந்தி தமது சமூக ஊடகப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

உலகெங்கிலும் உள்ள இந்திய தூதரகங்கள் மகாத்மா காந்தியின் பிறந்த நாளான இன்று அவருக்கு அஞ்சலி செலுத்தி, அவரது உலகளாவிய அமைதி  மற்றும் அகிம்சை முறையை கொண்டாடின.

இந்நாள், அவரது வாழ்க்கை நெறிமுறை தத்துவத்தை மதிப்பது மட்டும் அல்லாமல், அவரது கொள்கைகளை பரப்புவதற்காக உலகம் முழுவதும் அனுசரிக்கப்படும் சர்வதேச வன்முறையற்ற தினமாகவும் கடைபிடிக்கப்படுகிறது.

*லால் பகதூர் சாஸ்திரி (12)*

முன்னாள் பாரத பிரதமர் லால் பகதூர் சாஸ்திரியின் 121 ஆவது பிறந்த நாளான இன்று குடியரசு துணைத் தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் அவருக்கு அஞ்சலி செலுத்தினார். சாஸ்திரியின்

வாழ்க்கையும், தலைமையும் தார்மீக தைரியத்தை நாட்டு மக்களுக்கு எடுத்துக் காட்டுவதாகவும், நாட்டின் நலனுக்காக தனிப்பட்ட நலன்களை தாண்டி தலைமுறைகள் உயர ஊக்கம் அளித்ததாகவும், குடியரசு துணைத் தலைவர் தமது சமூக ஊடகப்பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

லால் பகதூர் சாஸ்திரி ஒரு சிறந்த அரசியல்வாதி என்றும், அவரது நேர்மை, பணிவு, தலைமைத்துவம், தீர்க்கமான செயல்பாடு ஆகியவை நாட்டை வலுப்படுத்தி உள்ளது என்றும் பிரதமர் திரு நரேந்திர மோடி தமது சமூக ஊடகப் பதிவில் குறிப்பிட்டுள்ளார். ஜெய் ஜவான்-ஜெய் கிசான் என்ற அவரது அழைப்பு மக்களிடையே தேச பக்தியை தூண்டியது என்றும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

*காமராஜர்* (14)

சுதந்திர போராட்ட வீரரும், தமிழக முன்னாள் முதலமைச்சருமான காமராஜரின் நினைவு தினமான இன்று குடியரசு துணைத் தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் அவரை நினைவு கூர்ந்தார். காமராஜரின் வாழ்க்கை, எளிமை, நேர்மை, மதிய உணவு திட்டம், கல்வி மற்றும் ஏழைகளின் மேம்பாட்டிற்கு விலை மதிப்பற்ற பங்களிப்பை அளித்துள்ளதாக அவர் தமது சமூக ஊடகப் பதிவில் தெரிவித்துள்ளார்.

பெருந்தலைவர் காமராஜரின் நினைவு நாள் இன்று புதுச்சேரி அரசு சார்பாக அனுசரிக்கப்பட்டது. காமராஜர் சாலை-அண்ணாசாலை

சந்திப்பில் உள்ள அவரது திரு உருவ சிலைக்கு துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன், முதலமைச்சர் திரு ரங்கசாமி, சட்டப்பேரவை தலைவர் திரு செல்வம், பொதுப்பணித்துறை அமைச்சர் திரு லட்சுமி நாராயணன், துணை சபாநாயகர் திரு ராஜவேலு, சட்டமன்ற உறுப்பினர்கள் திரு நேரு, திரு பாஸ்கர் என்கிற தட்சணாமூர்த்தி, திரு பிரகாஷ்குமார் மற்றும் பலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

*சேவா சப்தாஹ்- ஆபரேஷன் சிந்தூர்* 1 (5)

பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசு, **மக்கள் சேவை-நல்லாட்சி** *என்ற தாரக மந்திரத்தின் அடிப்படையில்*, நாட்டில் மாற்றங்களையும் முன்னேற்றத்தையும் கொண்டு வர, அயராது உழைத்து வருகிறது. ஆபரேஷன் சிந்தூர் வெற்றி குறித்து, **சேவைத் திருவிழா** என்னும், **இந்த சிறப்பு தொடரில்** காண்போம். ..........

**(வாய்ஸ்)**

*சேவா சப்தாஹ்- ஆபரேஷன் சிந்தூர்* 2 (16)

ஏப்ரல் 22 ஆம் தேதி ஜம்மு காஷ்மீரின் பஹல்காமில் நடைபெற்ற பயங்கரவாத தாக்குதலை தொடர்ந்து மே 6 மற்றும் 7 ஆம் தேதிகளின் இடைப்பட்ட இரவுகளில் இந்தியா, ஆபரேஷன் சிந்தூர் என்ற திட்டத்தை தொடங்கியது. குறுகிய காலத்திற்குள் பாகிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் உள்ள 9 பயங்கரவாத மறைவிடங்கள் தாக்கி,

அழிக்கப்பட்டன. இதன் மூலம், இந்திய ஆயுதப்படைகளின் தொழில்நுட்ப வலிமையை இந்தியா உலகிற்கு வெளிப்படுத்தியது. இந்தியாவில் தயாரிக்கப்பட்ட வான் பாதுகாப்பு அமைப்புகள் மற்றும் பிரமோஸ் ஏவுகணைகள், உள்நாட்டு ட்ரோன்கள் மற்றும் ஏஐ அடிப்படையிலான அமைப்புகள் தங்களது திறன்களை வெளிப்படுத்தின. இந்தியாவின் வளர்ந்து வரும் ராணுவ வலிமைக்கு இதுவே சான்றாகும். ஆபரேஷன் சிந்தூர் முடியவில்லை என்றும், அது, தற்போது இடை நிறுத்தம் செய்யப்பட்டுள்ளது என்றும், பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார். மேலும், பாகிஸ்தான் ஆதரவுடன் மீண்டும் ஏதெனும் பயங்கரவாத தாக்குதல் நடைபெற்றால் இந்தியா ஒரு பெரிய தாக்குதலை நடத்துவதன் மூலம் பதிலளிக்கும் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

*புதுச்சேரி காந்தி* (13)

அண்ணல் காந்தியடிகளின் பிறந்த நாளை ஒட்டி, புதுச்சேரி அரசு சார்பில் இன்று கடற்கரை சாலையில் அமைந்துள்ள அவரது திரு உருவ சிலைக்கு துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன், முதலமைச்சர் திரு ரங்கசாமி, சட்டப்பேரவை தலைவர் திரு செல்வம், பொதுப்பணித்துறை அமைச்சர் திரு லட்சுமி நாராயணன், துணை சபாநாயகர் திரு ராஜவேலு, சட்டமன்ற உறுப்பினர்கள், காவல் துறை அதிகாரிகள் மற்றும் பலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். இதனை தொடர்ந்து மும்மத

பிராத்தனை நிகழ்ச்சியும், தேசபக்தி பாடல்களும், கதர் மற்றும் கிராம தொழில்வாரிய ஊழியர்களின் நூல் நூற்பு நிகழ்ச்சியும் இடம் பெற்றன.

காரைக்காலிலும் காந்தி ஜெயந்தி விழா வெகு சிறப்பாக நடைபெற்றது. குடிமைப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. திருமுருகன், அம்மாவட்ட ஆட்சியர் திரு ரவிபிரகாஷ் உள்ளிட்ட பலர் மகாத்மா காந்தியின் திருஉருவ படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

*ஜிஎஸ்டி- விவசாய இயந்திரங்கள் 1* (7)

நாட்டில் தற்போது அமலாகி வரும், அடுத்த தலைமுறை ஜிஎஸ்டி சீர்திருத்தங்கள், மறைமுக வரிக் கட்டமைப்பை எளிமைப் படுத்துவதில், முக்கிய நடவடிக்கையாக அமைந்துள்ளன. இதுவரை 4 அடுக்குகளாக இருந்த ஜிஎஸ்டி கட்டமைப்பு, 5 சதவிகிதம், 18 சதவிகிதம் என, 2 அடுக்குகளாக குறைக்கப் பட்டுள்ளது. உரங்கள் மற்றும் விவசாய இயந்திரங்களின் வரி விகித சீர்திருத்தத்தின் மூலம், விவசாயிகளுக்கு கிடைக்கும் பயன்கள் ஏராளம். அது குறித்த ஒரு செய்தி தொகுப்பு....

**(வாய்ஸ்)**

*ஜிஎஸ்டி- விவசாய இயந்திரங்கள் 2* (18)

விவசாயிகள் மீதான நிதி சுமையை குறைக்கவும், கிராமப்புற வளர்ச்சியை ஊக்குவிக்கவும் அத்தியாவசிய விவசாய உபகரணங்களை

மலிவு விலையில் விற்கவும், தற்போது அமல்படுத்தப்பட்டுள்ள ஜிஎஸ்டி சீர்திருத்தங்கள் பெரும் மாற்றத்தை உருவாக்கும் என்று எதிர் பார்க்கப் படுகிறது. தெளிப்பான்கள், சொட்டு நீர் பாசன அமைப்புகள், அறுவடை இயந்திரங்கள் மற்றும் சிறிய டீசல் இன்ஜின்கள், 12 சதவிகித வரியில் இருந்து 5 சதவிகிதமாக குறைக்கப்பட்டுள்ளது. இது, நீர் சேமிப்பு மற்றும் நீர் பாசனத்தை ஊக்குவிக்கும். மேலும் உற்பத்தி திறனையும் அதிகரிக்கும். உயிரி பூச்சிக் கொல்லிகள் மற்றும் நுண்ணூட்ட சத்துக்கள் மீதான வரியும் 5 சதவிகிதமாக குறைக்கப்பட்டுள்ளது. இந்த ஜிஎஸ்டி சீர்திருத்தங்கள் விவசாயிகளுக்கான செலவுகளை குறைத்து, சுற்றுச்சூழலுக்கு உகந்த விவசாயத்தை ஊக்குவிக்கும். அதுமட்டுமின்றி, அமோனியா, சல்பூரிக் அமிலம், நைட்ரிக் அமிலம் போன்ற உரங்கள் மீதான ஜிஎஸ்டி வரியும் 18 சதவிகிதத்தில் இருந்து, 5 சதவிகிதமாக குறைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம், உயிரி பூச்சிக் கொல்லிகளை பயன்படுத்த விவசாயிகளை ஊக்குவித்து, மண்ணின் ஆரோக்கியத்தையும், பயிர் தரத்தையும் மேம்படுத்த உதவுகிறது. விவசாயத்தை வலிமையானதாகவும், தன்னம்பிக்கை உடையதாகவும் மாற்றும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

*துணை நிலை ஆளுநர்* (15)

புதுச்சேரி உள்ளாட்சித் துறை சார்பில் தூய்மையே சேவை 2025 விழாவின் நிறைவு நாள் நிகழ்ச்சி இன்று நடைபெற்றது. பெருந்தலைவர்

காமராஜர் மணி மண்டபத்தில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் கலந்து கொண்டு, தூய்மை சேவையில் சிறப்பாக பணியாற்றிய நிறுவனங்கள், மாணவர்கள், தன்னார்வலர்கள், துப்புறவு பணியாளர்கள், கல்வி நிறுவனங்களுக்கு பரிசுகளை வழங்கினார். நிகழ்ச்சியில் முதலமைச்சர் திரு ரங்கசாமி, சட்டப்பேரவைத் தலைவர் திரு செல்வம், மாநிலங்களவை உறுப்பினர் திரு செல்வகணபதி. தலைமை செயலர் திரு சரத் சவுகான் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சியில் பேசிய திரு கைலாஷ்நாதன், பிரதமர் திரு நரேந்திர மோடியால் 2014 ஆம் ஆண்டு தொடங்கி வைக்கப்பட்ட தூய்மை இந்தியா திட்டம், இந்தியாவில் ஒரு சமுதாய புரட்சியை தேசிய அளவில் தூய்மை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தி இருக்கிறது என்றால் அது காந்தியடிகளுக்கு நாம் செலுத்தும் உண்மையான மரியாதையை காட்டுவதாக தெரிவித்தார். மேலும் அவர் கூறுகையில்.......

**(வாய்ஸ் துணை நிலை ஆளுநர்)**

*ரங்கசாமி* (7)

தூய்மையான இந்தியாவே, ஆரோக்கியமான இந்தியாவை உருவாக்க முடியும் என்ற பிரதமர் திரு நரேந்திர மோடியின் எண்ணத்தின் அடிப்படையில் இது போன்ற விழாக்களை நாம் கொண்டாடி வருவதாக முதலமைச்சர் திரு ரங்கசாமி தெரிவித்தார். தூய்மையே சேவை 2025

விழாவின் நிறைவு நாள் நிகழ்ச்சியில் பேசிய அவர், இது போன்ற விழாக்களால் தூய்மை குறித்து அனைத்து தரப்பினருக்கும் விழிப்புணர்வையும் ஏற்படுத்தி வருகிறோம் என்றார். மேலும் அவர் கூறுகையில்

**(வாய்ஸ் ரங்கசாமி)**

விடுமுறை (4)

புதுச்சேரி, காரைக்கால், மாகே, ஏனாம் ஆகிய 4 பிராந்தியங்களில் உள்ள அனைத்து அரசு, மற்றும் அரசு நிதி உதவி பெறும் பள்ளிகள் தனியார் பள்ளிகள் மற்றும் அனைத்து கல்லூரிகளுக்கும் நாளை விடுமுறை அளிக்கப்படுவதாக கல்வித் துறை அமைச்சர் திரு நமச்சிவாயம் அறிவித்துள்ளார்.

எல்எல்சி காந்தி (7)

தேசப்பிதா மகாத்மா காந்தியடிகளின் 156 வது பிறந்த தின விழா, எல்எல்சி இந்தியா நிறுவனத்தில் இன்று காலை நடைபெற்றது. என்எல்சி இந்தியா நிறுவன தலைவர் மற்றும் மேலாண் இயக்குநர் பிரசன்னகுமார் மோட்டு பள்ளி, நகர நிர்வாக அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள மகாத்மா காந்தி சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். தொடர்ந்து, கற்றல் மற்றும் மேம்பாட்டு மையத்தில் அமைந்துள்ள

கலையரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சிகளில் பங்கேற்று, அவர் உரையாற்றினார்.

*வானிலை (8)*

மத்திய மேற்கு வங்க கடலில் நிலவிய காற்றழுத்த தாழ்வுப் பகுதி ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதியாக நேற்று வலுப்பெற்றது. இது, வடக்கு மற்றும் வடமேற்கு திசையில் நகர்ந்து, ஆந்திர கடலோர பகுதிகளில் கரையை கடக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதன் காரணமாக தமிழகத்தின் ஒரு சில இடங்களிலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும் வரும் 7 ஆம் தேதி வரை லேசான மழைக்கு வாய்ப்புள்ளதாகவும், ஒரு சில இடங்களில் இடி-மின்னலுடன் கூடிய கனமழை பெய்ய வாய்ப்புள்ளது என்றும் சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

தேசப்பிதா மகாத்மா காந்தியின் 156 ஆவது பிறந்த நாளான இன்று நாட்டின் பல்வேறு பகுதிகளில் அஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

காமராஜரின் வாழ்க்கை, எளிமை, நேர்மை, ஆகியவை ஏழைகளின் மேம்பாட்டிற்கு விலை மதிப்பற்ற பங்களிப்பை செய்துள்ளதாக குடியரசு துணைத் தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

ஆபரேஷன் சிந்தூர், இந்திய ஆயுதப்படைகளின் தொழில்நுட்ப வலிமையை உலகிற்கு வெளிப்படுத்தி உள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

பிரதமர் திரு நரேந்திர மோடியால் தொடங்கி வைக்கப்பட்ட தூய்மை இந்தியா திட்டம், நாட்டில் சமுதாய புரட்சியை ஏற்படுத்தி உள்ளதாக புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் தெரிவித்துள்ளார்.